வி. [illegible]

ஶ. [illegible]

வி. [illegible]

ஶ. [illegible]

வி. [illegible]

ஶ. [illegible]

வி. [illegible]

ஶ. [illegible]

வி. [illegible]

ஶ. [illegible]

ஶுபமஸ்து

[illegible]

தொட்டுவாய்க்கும் சமயத்தில் சிரவணம் செய்யும்பே து இஷ்டர்களுக்கு தீர்ந்து மனதில் பற்றும்.)

ம. கெடுத்தாயென்று என்னை நீர் வெறுப்பதேன்? பயனற்ற உறவைப் பற்றுதலால் என்ன உண்டு. நீர் கூறியவாறே அதை விட்டுவிட்டேன். இனியாவது நான் விஸ்ராந்தியடைந்தேனு?

வி. அழிந்துபோகின்ற பொருள் செல்வமோ? பலவகைப்பட்ட துன்பமல்லவா?

ம. முன்மனைவியாதி உறவுகளை நீர்விடச்சொல்ல உமது சொற்படி விட்டேன்; இப்பொழுது இந்தப் பொருளையாகிலும் வைத்துக்கொண்டு தவஞ் செய்வேனென்றால் அதுவும் நாசமென்றும், அதனாலும் துன்பமுண்டென்றும் சொல்லுகிறீர்; ஆனால், இன்பமாவதுஎது?

வி. அந்தப்பொருளைக் கைவிடுவதே சுகம், அதைக் கைப்பற்றுவதேதுன்பம் என்றஉண்மையாக அறிந்தாயில்லை?

ம. நல்லது, அந்தப்பொருளையும் விட்டு இருக்கச் சொல்லுகிறீரோ?

வி. இதற்கு முன்பற்றுக்களாயுள்ளன யாவும் துன்பமென்றறிந்து துறந்தவர்க்கு உன்னைப்போலும் கூர்ந்த புத்திஇல்லையா சொல்?

ம. சரிதான் ஒப்புக்கொள்ளுகிறேன். பொருளையும் விட்டேன். இனி அந்தப்பொருளுக்கு மேலான பொருள் எது சொல்லும்?

வி. நெஞ்சே, இனி இப்பொருள்மேல் வைத்த பற்றுநீங்கிமேலாகிய சிவனது அருளையே பொருளென அடைவோம்; அதை அடைந்தால் அவ்வருளே நமக்கு அரிய செல்வமாகும்.

☞ (இப்பொருளால் இவ்வின்பம் வருதல்போல அவ்வருளால் அவ்வின்பம் வருதலினால், அவ்வருளே அரியசெல்வமுமாம் எனக் கூறினோம்.)

ம. இதுதானுமனதிற்கு இதம்?

வி. நெஞ்சே, இந்த, கஜ, துரகபதாதிகளாகிய நால்வகை சேனையுஞ் சூழ்ந்துவர இப்பூவுலகு அரசாண்டு, அவ்வாழ்வோடும் அழிந்துபோகும் மன்னரின் பொய்வாழ்வை இனிதென்று நீ கருதினையோ?

ம. நீர்மேற்கூறியவண்ணம் உறவையும், பொருளையும், விட்டேன். இப்பொழுது இவ்வரசரது செல்வத்தையும், இவரை யாவரும் வணங்கும் இவரது பெருமையையும் கண்டு அதிசயித்தமாத்திரமேயன்றி வேறில்லை. அதற்குநீர் இச்செல்வமும் பெருமையும் பொய்யென்றும், இவற்றை நீ விரும்பாதேயென்றும் கூறினீர்; ஆனால், இச்செல்வத்திற்கும் பெருமைக்கும் மேலாகிய மெய்ச்செல்வமும் பெருமையும் எவை?

வி. அணுவளவாயினும் குறைவுபடாத பரிபூர்ணமாய் நின்மலமாய் உள்ளசிவஞானச்செல்வத்தை ஒருவன் அடைந்தால், அவன் பாதத்தை வானகத்தோரும் வையகத்தோரும் வந்து வணங்குவார்கள். ஆனதுபற்றி, மெய்ச்செல்வமும் பெருமையும் இவையென்று அறி; அன்றியும், இந்த மெய் வாழ்வு கண்டவுடன் முன்னர் பொய் வாழ்வில் வீணாய்க்கழிந்த காலத்தை நினைந்து இத்தனைகாலம் இவ்வின்பத்தைவிட்டு இருந்தோமென்று இரங்கவும் வருமென ஆப்தர் நாலடியார், ஞானவாசிஷ்டர், பட்டணத்துப்பிள்ளை முதலானோர் உரைத்தவாக்கியங்களை அறிந்தாயில்லை போலும், அவர்கள் மொழிந்தவாக்கியங்களைப் படித்தறி.

ம. அவர்கள் மொழிந்தது ஒன்றா? அல்ல. எத்தினையெத்தினையோ வாக்குகளை மொழிந்தார்கள். அவைகளில் எது என்று அறிவேன். அவர்கள் மொழிந்த வாக்குகளை சற்றுச்சொல்லும் பார்ப்போம்.

இன்னும்வரும் — இஷ்டர்களேவந்தனம்
கொள்ளேகாலம்நேசன்

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ௩௰ உ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம்] ௧௮௮௭ ௵ மார்சு ௴ ௩௰ உ [இலக்கம். ௰

[illegible]

குதர்க்காசலகுலிசம்

விடைத்த மேல்விடை

பிரம்மஸ்ரீ, ஸ்ரீநிவாஸ மூர்த்திகள் யான்தொடங்கிய, "குதர்க்காசலகுலிசம்,, அசந்தர்ப்பத்தால் விரைவில்முடியாமல் தாழ்த்தது. அதற்குள் "நவைகாஸராகிய நமதுநண்பரொருவர் அதற்குவிடைகூற வெளிவந்தனர். எப்படியாவது செவ்வையான வைதிகவிசாரணை செய்து உத்கிருஷ்டாசாரங்களைக்கொள்ளவேண்டியது நம்மவர்கடமை யாதலால், நண்டர் பிரவிருத்தி நன்றேயாம்- புண்டரதாரணவிஷயமாய் முன்னோர் நூல்களில் வரைந்திருக்கும் சிலவரிகளை அப்படியேயெடுத்து இன்னொருசஞ்சிகையில் வெளியிடுவோம். அதைப்பார்த்தபின் நண்டர்பதில்சொல்லுவாராக. சிலவசனம் மட்டும்இங்கெடுத்துக்காட்டுவோம். "வேதாந்தமென்னும் பெயரிவைாய்நூற்றெட்டுபநிஷத்துகள் பிரகாசிக்கின்றனவற்றுள். விபூதிதாரணத்திற்காதாரமான, பிரஹஜ்ஜாபாலம், பஸ்மஜாபாலம்காலாக்நிருத்திரம், என்றுதொடங்கிய அநேக உபநிஷத்துகளிருக்கின்றனகோபீச்சந்தன புண்டரதாரணத்துக்கு ஆதாரமான, வாசுதேவாபநிஷத்தொன்றிருக்கிறது. இன்னும்ஸ்ரீருத்திராக்ஷதாரணத்துக்கு ஆதாரமான ருத்திராக்ஷோபநிஷத்தும்,பத்மாக்ஷமாலாதாரணத்துக்காதாரமான, அக்ஷமாலிகோபநிஷத்துமிருக்கின்றன. இவைகளேயன்றி, சித்ரோர்த்வபுண்டரதாரணம், துளசிகாஷ்டதாரணம், மஞ்சணூல் தாரண மித்யாதிகட்குப்பிரமாணமாக வொருபநிஷத்வாக்கிய சகலமாவது காணவில்லை. நாம்வெளியிட்ட பஸ்மஜாலத்தில் சிவோபாசகராக வெளிப்பட்டவிட்டுணுவை வேறுபிரித்து, சாக்ஷாத் லக்ஷ்மீநாதநாகிய பரமன்வேறொருவரெனவும், அந்தப்பரமனான நாராயணனேயெல்லாவற்றிற்கும் காரணரென்றும், அப்படிவேதம் வெளியாகிறதாகவும், ஒருபச்சைப்பசும்பொய்யை நமது நண்பர்கூறினார். பிரம்மா; விட்டுணு, ருத்திரரென்னும் திருமூர்த்திகளையும், உபாசர்களாகவிளக்கி, நாலாவதுமூர்த்தியாகிய, பரமசிவத்தை உபாஸ்யப்பொருளாக நாட்டிய, மேலுபநிடத்தைவிசாரியாமல், இரண்டுவிதவிட்டுணுக்களை, த்தேடினார். திருமூ

[illegible]

...ர்க்கதராகிய, விட்டுணுவைத்தவிர வேறுவிட்டுணுவருண்டெனில் "[illegible]" என்று, வேதத்தில் சிவம் நாலாவது பொருளென்றுவெளிப்படுத்தது போல், விட்டுணுவை நாலாவது பொருளென்றுகூறுகிற, வேத வாக்கியத்தை, நண்பர்காண்பிப்பாராக! பிரம்மோபநிடத்தில் "[illegible]"

எனனும் வாக்கியத்தால், புருடனுக்குஸ்தானங்கள் நான்கென்றும், அவை, நாபி, இருதயம், கண்டம், சிரசு, என்றும் வெளியாகி, சாக்கிரத்தில் பிரம்மனும், ஸ்வப்பனத்தில், விட்டுணுவும், சுஷுப்தியில், ருத்திரனும், துரியத்தில், அக்ஷரசப்தவாச்சியரும், சூரியமண்டலாந்தர் வர்த்தியும், வியாபகசைதன்யருமாகிய, ஸ்ரீபரமசிவமூர்த்தியும், அதிதெய்வங்களாக விளங்குகிறார்களென்று, வெளிப்பட்டது. இதனால் நான்காவது தத்வம் வெளியாகி, "[illegible]" என்கிறவாக்கியத்தால், அந்தத்துரியதத்துவத்தில், அதீரிக்தமான, தேவர்களும், இருடிகளும், பிதிர்களும், ஈசர்களாக மட்டார்களென்று, பெறப்பட்டது. தாபநீயோபநிடத்தில் "[illegible]" என்றதொடக்கத்தால், நாபி இருதய புருவமத்யங்களில், அகாராதி மாத்ராத்ரய வாச்சியர்களான பிரம்ம விட்டுணு ருத்திரர்களுக்கு, உபாசனுவிதானஞ்சொல்லியபின்னர் "[illegible]" என்று சமஷ்டிப்பிரணவவாச்சியமாயும், துவாதசாந்தோபாஸ்யமாயும், சர்வைச்வரிய சாலியாயும், மூர்த்தித்ரயாதீதமாயும், பிரதிபாதிக்கப்பட்டு "[illegible]" என்னும் அதர்வசிகாவசனத்தால், பிரம்மவிட்டுணு, ருத்திரேந்திராதிகள் பிறப்பிக்கப்படுகிறார்களென்றும், அதனாலவர்கள் ஜகத்காரணர்களல்லரென்றும், சர்வைசுவரியசம்பந்நனும், சகலஜகதீசனும், அந்தருபாசனுவிதிகளால், தியானிக்கப்படுபவனும், தஹராகாசமத்யகதனுகிய சம்புசப்தவாச்சியனுமாகியபரமசிவனே! ஜகத்காரணவஸ்துவென்று, பெறப்பட்டதினால், மூன்றுதத்வங்களுக்கும், அதிக்கிரமித்த தத்வம், சம்பு சப்தருடிவாசகத்தால், வெளிப்பட்டது. அந்ததத்வம் "[illegible]" என்கிறகைவல்ய உபநிடத வாக்கியத்தால் உமாசகாயத்வம், பரமைசுவரியசாலித்வம், பிரபுத்வம், நீலகண்டத்வம், சமதமாத்யனந்த கல்யாணகுணசம்பன்னத்வமுடையதாகி, சமஸ்தசாக்ஷியும் தமோதீதமுமாய், விளங்குமென்றும். அதனைத்தியானிப்பவர்க்குச்சம்சாரபந்த விமுக்தியை அனுக்கிரகிப்பதென்றும், பெறப்பட்டதோடு "[illegible]"

[illegible]

[illegible]" என்னும்ருக்வேத வாக்கியத்தால் அசுவரமான அவயவங்களோடு கூடினதும், அநேகவடிவங்களை உடையதுமென்று, உக்கிரநாமவாசகத்தால், பெறப்பட்டதனால், உமாசகாய நீலகண்டதவாதிசுவரூப திவ்யமங்களதேசோநிதியாய்விளங்குவது, நான்காவதுதத்வமாகிய துரியபதமென்றுநிரூபிக்கப்படுகிறது. இன்னும் "[illegible]" என்றபடி "[illegible]" என்றுவேதங்களில் கூறுகிறபடியால், பிரம்மபத ருத்திரபதங்களிரண்டும், ஓரே பொருளின், பரியாய நாமங்களாக வெளிப்படுகின்றன. இப்படியே "[illegible]" என்றுபெறப்பட்டதற்கேற்ப [illegible] என்றும் வெளிப்படுகின்றன. ஈங்கும் அவ்விருபதங்கள் பரியாயமாயின. இதனால்பிரம்மமேருத்ரனெனவும், ருத்திரனேபிரம்மமெனவும், ருத்ரரைத்தவிர வேறொரு பிரம்மமிடையாதென்பதும், தீர்மானம். [illegible]

என்றதும், பிரம்மபரியாய மாகாதோவெனின், இதில் [அத்விதீயம்] என்னுமவிசேடணமில்லாமையால், ஏகார்த்தம் பயவாது அதனலிது பிர்ஹமப்பிரதிபாதனமான சுருதிக்குப்பரியாயமெனலமையாது. ஆவேஇந்திரசந்திராதிகளைப்பிரதிபாதிக்குமன்னவற்றோடு சேருந்தகைமைத்து "[illegible]" எனவும், "[illegible]" எனவும் போந்தவாக்கியங்களில், மாதொருவனைக்காட்டிலும், உத்கிருட்டனும், சமானனும். இல்லையோ அவன் சிவனென்றுவிளங்குகிறது "[illegible]" என்னுஞ்சுருதியுமதற்குச்சான்றாகும். இங்கு, பெறப்பட்ட, ஈசப்தம்பிரஹ்ம விட்டுணுக்களுக்கு வேறனதொருபொருளைக்காட்டலால், அவ்விருவரும் ஈசர்களாகாரென்பதுநிலைபெறும். இங்குஈச பதம் ருத்ரஸ்தானத்திலே வைக்கப்பட்டமையால், அவ்வுருத்திரன் ஈசனது விபூதியென்பது சித்தம். ஈசன், ருத்திரன் என்பதாதிநாமங்கள் இருவருக்கும் காரணகாரியபத்வத்தால், சிந்திக்கும். நமதுவைதிகசைவசித்தாந்தத்தில், திரிமூர்த்தியுத்தீர்னரான துரியமூர்த்தி யங்கீகரித்திருப்பதுபோல் பாஞ்சராத்திரத்தில், துரிய விட்டுணுவை யங்கீகரித்ததில்லை. இதனால் சைவநூல்களில் விட்டுணுவுக்குக்கூறும் அபகருடமெல்லாம் அந்த ஒரு விட்டுணு வையேசாரும். வைணவநூல்களில் உருத்திரமூர்த்திக்குக்கூறும் அபகருடமெல்லாங்குணருத்திரரையேயன்றித்துரியருத்திரரைச்சாராது. இன்னும் ஏகாதசருத்திரர், சதருத்திரர், சகஸ்ரருத்திரர்களிருப்பும் வேதத்திலே காணப்படுகையால், துரியசிவனிடம் அபகர்டமேற வேயிடமில்லை. அபகர்ஷோத்கர்ஷங்களையொரேபொருளிடங்கூறுவதல்லாமையால், வைணவநூல்களிலே விட்டுணுவுக்குலக்கூறப்படுமுத்கர்ஷங்களும் அந்தர்யாமிபரமாதால்சிவைகநிட்டமேயாகும். இப்படிப்பராசரபுராணத்தில்வியவஸ்தைபண்ணியிருத்தலைக்கண்டறிக. இன்னும் "[illegible]" என்னும் வசனத்தால் அன்னியமாயுள்ள சகலமானவற்றையும் தள்ளிவிட்டு சி

[illegible]

வமென்று ம்தன்மையால், மங்களத்தை ச்செய்கிற சிவபெருமானொருவரே தியானஞ்செய்பத்தக்கவரென்று பெறப்பட்டனமையால், துரியப்பொருளாகிய சிவமூர்த்தியையே முமுக்ஷுக்களடைக்கின்றனர். சகலமான வற்றையும் தள்ள வேண்டியதென்றதில், " [illegible] " என்றதேத்யாதி அனந்தசுருதிவாக்கியங்களை, வாரிவஞ்சி இம்மட்டில்விட்டோம். வேண்டுங்கால்விரிப்பேம். இவைகண்டபின் நண்பர்யாதுசொல்லுவரோ, தெரியாது, நாமும்பாஞ்சராத்திரமத தத்வருட்பிறந்தவரே தவிறவேறல்ல சத்தியத்தைத்தழுவாமல் துரபிமானங்கொள்வதுபுத்திமான்களின்கடமையாகாது. சும்மாயிருந்த எம்மைககலசத்திற்குவலிந்து இழுத்தவர் பாஞ்சராத்திரிகளே தவிர, நாம்வலியவாதிக்கவந்தோமில்லை. நண்பர் தமது சுவயநாமத்தையும், வசிப்படத்தையும், வெளியிடாத வரையில், அவரோடினிவாதாடோம்.

ஓர்வைணவன், என்கிற இங்ஙனம்

சாமக்குளம், வெங்கடரமணதாஸ்

கோயமுத்தூர்

சம்பாஷணை

[முன்தொடர்ச்சி]

கொ - உலகுபூதமாயுள்ளது.

சா - அறிவுபகுத்துணரும்தன்மையாயுள்ளது.

கொ - அறிவு, உருவா? ரூபமற்றதா?

சா - உலகு, உருவா? ரூபமற்றதா?

கொ - உலகம, உருவே.

சா - உலகுமுருவாயின் அறிவுமுருவே.

கொ - அறிவு எங்ஙனமுருவாகும்?

சா உலகுஎங்ஙனமுருவாகும?

கொ - உலகுகண்ணுக்குப்புலப்படுவதால் உருவே.

சா - கண்உடலன்றியுளதோ? உடல்உலகன்றியுளதோ?

கொ உலகன்றின்றும்.

சா -ஓர்பொருளினையுளதில்லதென வாயுங்கால் அதற்குப்பின்னமாயிருந்தன்றோ வுணர்தல்வேண்டும்? அங்ஙனமேஉலகைப்பின்னமாயுணர்ந்தார்யாவர்?

கொ - யாருமிலர்.

சா - பின்னை உருவெனலைஅங்கீகரித்தலெங்ஙனம்?

கொ - உலகின்கணிருந்து சுகதுக்கங்களை அனுபவிக்க, எங்ஙனம்உலகு இன்றெனக்கூறுவது?

சா - அனுபவித்தவர் யாவர்? உளரேல் பின்னமாயிருத்தல் வேண்டும்

கொ - அறிவினின்றே யுலகுண்டாவது எங்ஙனம்?

சா - தூக்கத்தில்காணும் சொப்பனஉலகு அறிவின்கண்ணேயுண்டாகின்றதன்றோ?

கொ - சொப்பனஉலகம் சுத்தமித்தையன்றோ?

சா - இவ்வுலகுமாத்திரம் சத்தியமோ? ஆராய்ச்சியின்கண் பொருளின்றிப்போதலாலும், வேற்றுமையாகநின்று கண்டார் ஒருவருமிலராதலாலும் மித்தையெனற்கையமா?

சொ - அவ்வறிவுசரீரமன்றோ?

சா - அச்சரீரம்அறிவன்றோ?

[illegible]

கொ - இங்ஙனம்செல்லின் அனவத்தாதோடமெய்துமே?

சா - அனவத்தாதோடமின்றிக்கூறுவது உமதுகடமையே. உலகு முன்னரென க்கூறியதன்பேரில் அதைமறுக்க அறிவென்றுகூறினேம். நீர் அங்ஙனம்கூறுவிடில், யாமுங்கூறேம்.

கொ - உலகினின்றேஅறிவுண்டாவதற்குச்சரீர அவயவத்தானுங்கல்வியானும், பழக்கத்தானும், அறிவுபேதப்படுவதேபோதுமானசாக்ஷியன்றோ?

சா - உலகெனலே அறிவாயிருக்கவும், அறிவன்றியுலகில்லாதிருக்கவும், கண்டும் மீண்டும் உலகினின்று அறிவுஉண்டாமென க்கூறலெங்ஙனமாகும்? அன்றிச்சொப்பனத்தின்கண் அறிவின்காரியமான அவ்வுலகில்அங்குசரீர தர்ம்மத்திந்கியைய, அறிவுகாண ப்படினும் அவ்வறிவின்கணிருக்கும்வியட்டிதேகத்திற்கும், சமட்டியுலகிற்கும், அறிவேகாரணமன்றோ?

கொ - அறிவின்காரிய முலகெனின், அறிவிற்கும் உலகிற்கும் பேதந்தோன்றப்படாதே.

சா - சந்திரனில்லாயிரவின்கண் ஆகாயத்தில்சந்திரனிருப்பதாகநினைக்கின், அந்நினைவுக்கு அச்சந்திரன் பேதமாகக்காணப்படினும் அபேதமன்றோ? சொப்பனவத்தையின்கண், அறிவினின்றுந்தோன்றிய, வுலகுபேதமாகத்தோற்றினும், அபேதமன்றோ?

கொ - உலகிருந்துதானே ஆதியில்ஜீவப்பிராணிகள்தோன்றியிருக்கவேண்டியது.

சா - அறிவிருந்துதானே ஆதியில் உலகுஉதித்திருக்கவேண்டுவது.

கொ - சுழுத்தியின்கண்உலகின்றோ?

சா - சுழுத்தியின்கண்உலகுளதோ?

சொ - இருப்பதாவன்று ஏனையோர் அறிந்திருப்பது?

சா - ஏனையோர் அறிவுடனிருப்பதாலன்றுஉலகுகாணப்படுவது?

கொ - உலகினின்றன்றோஅறிவைக்காண்பது?

சா - அறிவினின்றன்றோ உலகைக்காண்பது?

கொ - நீரினின்றும், அலையுண்டாவதுபோன்று, உலகினின்றும்அறிவு தேனேன்றுகின்றதன்றோ?

சா - நீரினின்றும்அலைஉண்டாவது போன்றுஅறிவினின்றுஉலகுண்டாவதாகக்கூறத்தகாதோ?

கொ - கண்டமான அறிவினின்றும் அகண்டமானஉலகம் எங்ஙனமுதிக்கும்?

சா - கண்டமான உலகினின்றும் அகண்டமான அறிவு எங்ஙனமுதிக்கும்?

கொ - அரூபமான அறிவினின்றும் ரூபமானவுலகு தோற்றுமா?

சா - உலகம், காரியகாரணசோதனையிலில்லாமற்போதலானும், ஒன்றன் அல்லது பலவின் கூட்டத்தையன்றிஅபாவப்படுதலானும், இன்மையால்தோற்றுவதுஇன்மையேயாதலானும், பொருளின்மைபற்றிப்பொருட்பெயரன்மையானும் இன்மையாயவுலகு ரூபமெனல்எங்ஙனம் அமையும்?

கொ - இன்மையாய அறிவினின்றும் உண்மையாய உலகு தோற்றுமா?

[illegible]

சா - இன்மையாயவுலகினின்றும் உண்மையாயவுலகுதோற்றுமா?

கொ - ஓர்போதுளதாய அறிவினின்றும் என்றுமுளதாயவுலகுதிக்குமா?

சா - ஓர்போதுளதாய வுலகினின்றும்என்றுமுளதாய அறிவுதிக்குமா?

கொ - அநித்தியமாய அறிவினின்றும் நித்தியமாயவுலகுதோன்றுமா?

சா - அநித்தியமாயவுலகினின்றும் நித்தியமாய அறிவுதோன்றுமா?

கொ - கற்பிதமான அறிவினின்றும் ஸ்வயமான உலகுதிக்குமா?

சா - கற்பிதமான உலகினின்றும் ஸ்வயமான அறிவெழுமா?

கொ - சித்தினின்றும்சடம்நிகழுமா?

சா - சடத்தினின்றும்சித்துநிகழுமா?

கொ - வியாப்பியமான அறிவினின்றும் வியாபகமான வுலகுதிப்பதெங்ஙனம்?

சா - வியாப்பியமானவுலகினின்றும் வியாபகமான அறிவுதிப்பதெங்ஙனம்?

கொ - உலகு, இருந்து தோற்றுவதால் சத்தேயாகும்.

சா - அறிவு- இருந்துதோற்றுவதால்சத்தேயாகும்-

கொ - அறிவிருப்பதுண்மையேல் உலகின்றியிருத்தல்வேண்டும்?

சா - உலகிருப்பதுண்மையேல்அறிவின்றியிருத்தல்வேண்டும்

கொ - உலகு, காரணமாகலின் அதுவே முன்னாகும்.

சா அறிவுகாரணமாகலின் அதுவேமுன்னாகும்.

கொ - உலகு! குணியும் தர்மியுமாதலால் முன்னெனக் கூறவேண்டும்

சா - அறிவு' குணியும் தர்மியுமாதலால்முன்னெனக் கூறவேண்டும்.

கொ - அறிவு என்பது தொழிற்பெயராகலின் எங்ஙனம் குணியும் தர்மியுமாகும்?

சா - உலகு-சம்ஸ்கிருத பாஷையில் காணப்படுவது என்னும் பொருள் தருவதால் எங்ஙனம் குணியும் தர்மியுமாகும்

ஓர் நண்பன்

இன்னும் வரும்

உபந்நியாசம்

(முன்தொடர்ச்சி)

முற்கூறிய ஜாதியாசாரம் குலபரம்பரையாய் வந்திருப்பதால், இதுவேதங்களிற் காணுநதாயினும் அது வேதத்தில் எடுத்துக்காட்டியதுபோலவே அவசியம் நம்பத்தக்கதென, பெரியோர்களான பிராமணர்களுரைக்கின்றனர். மந்திரம்பிராமணம் என்கிற இரண்டு பாகங்களோடுகூடிய நான்கு வேதங்கள் இருக்கின்றனவென்பதே அவர்கள்வாதம்- இவற்றுள் அநாதியாயுள்ள மந்திரங்களின்தொகுதியான இருக்குவேதம் ஒன்றேஅத்தன்மைத்தென இங்கு எடுத்துக்கட்டலாம்- யாகங்களில் உத்காதா என்பவன், கானஞ்செய்யவேண்டிய மந்தி

[illegible]

ரங்களைமாத்திரம் தனதுருவாகக்கொண்ட சாமவேதம் அந்த இருக்குவேதத்திலிருந்து எடுக்கப்பட்டதே. எஜுர்வேதமும் ஹோதாவைக்குறித்து அத்துருயுக்கள் சொல்லவேண்டிய சில வாக்கியங்களைததவிற மற்றவிடங்களில் அவரவர் பிரயோகிக்கவேண்டியஇருக்குவேத மந்திரங்களால் நிரம்பியதே. அதர்வணவேதமோவெகுகாலத்திற்குபின்னர் உண்டாயிற்றெனகூசாமல்ஸ்தாபிக்கலாம்- ஏனெனில் அதிலனேக இருக்குவேத மந்திரங்களும்,அநேககாலங்களைக்குறிக்கும்படிபலசதைகளும்,பல ஆபிசாரப்பிரயோகங்களும், அவ்வேதத்தில்காணப்படுகிறது- ஆகலால் வேதமென்று இருக்குவேதம் ஒன்றே பிரமாணமாகக் கொள்ளத்தக்கதென்று ஏற்பட்டது. அதிலுள்ள பழைய மந்திரபாகங்களை அநாதிகளெனஸ்தாபிக்க அந்த வேதங்களின்பாஷியக்காரர்கள் பலயுக்திகளை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்- அந்தயுக்திகளே மற்றபாகங்களையும் ஈசுவரனுடைய திருவாக்கென ஸ்தாபிக்கக்காரணமாகுமென்பது உரையாசிரியர்கள் உட்கருத்து. இவ்வேதங்களில் உள்ள பிராமணம் என்கிற பாகங்களில்மாத்திரம் இவர்களுக்கு ஆசாரியத்தன்மையைப்பொருத்த வெகு பல பெருமைகளை வெளியிடவேண்டி வெகுவாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் வேதம் பிரமாணமென நம்பி அதில் கூறிய விசேஷாதிகாரங்களை ஆசாரியர்கள் கைகொண்டகாலத்தில் பிராமணம் என்கிற பாகங்களை செலுத்தியிருக்கக் கூடுமென்பதும் அவ்வளவு நம்பத்தக்கதில்லை. பிராமணங்களும் மந்திரங்களைப்போல்அநாதிகளாயிருந்தபோதிலும் அவைகளிலும் ஜாதி மத ஸங்கேதங்களைக்குறித்து, எடுத்துக்காட்டியபாகம் சிறிதேனும் இல்லை- முற்கூறிய இருக்குவேத மந்திரத்தினால் நான்கு வருணங்களை சித்திக்கின்றன- ஆரியர்களெனப் பெயர்கொண்ட மூன்று முதல் வருணஸ்தரும் கடையில்வருணஸ்தரான சூத்திரர்களுக்கும் வெகுதாரதம்மியம் சொல்லப்பட்டுள்ளது- ஆரியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஒருவர்க்கொருவர் விவாகம் முதலிய சம்பந்தங்கள் ஆங்கு ஒப்புக்கொள்ளப்படவில்லை- ஆயினும் அது முற்றிலும் தடுக்கப் பட்டது என்றும் யாம் சொல்லததுணியோம். ஏனெனில் வாஜஸநேயசங்கிதையில் “ [illegible] நாயதி ” என்று இருப்பதால் எவ்விதம்ஓர்பசுதன் கழனியிலுள்ளபயிரைத்தின்றுவிட்டால்அதுகொண்டுஅதற்குடையவன்பசுகொழுத்ததெனக்களிப்படையான்.விசனமேகொள்வான்நமது கழனிபாழாயிற்றென்று- அவ்விதமே ஓர் சூத்திர ஜாதிப்பெண்ஆரியரைஆசைநாயகனாய்க் கொள்வாளேல் அவள்புருஷன் தன்பெண்சாதிஆரியரைபுணர்ந்தாள் பரிசுத்தை என்றுஎண்ணங் கொள்ளான்- அவள் கெட்டவளென்றே நம்புவான்,என்று பொருள்வெளிவருவதால்,ஆரியர் சூத்திரப்பெண்களைக் கொள்வதில அவ்வளவுகுற்றமில்லையென வெளியாகிறது. இப்பிராமணர்களில் பலமிச்சிரஜாதிகளைச் சொல்லியிருப்பதும் அவரவர்கொண்ட தொழிலைப்பற்றியதே “ [illegible] ” என்று கீழ் வருணஸ்தர்சூத்திரர் எனச்சொல்லப்பட்டார்கள்.அவர்கள் சம்பந்தம்எவ்விதமும் யஞ்ஞம் முதலியவற்றிற் குரிய பிராமணர்களுக்கு கூடாது. அவர் சம்பந்தம் அவரைக்கெடுக்கும். இச்சூத்திரர்களை சிலவிடம் ராக்ஷஸர்களென்றும் வழங்குவதுண்டு.மேலும் வேதத்திற்கு பின்பிறந்த பலகிரந்தங்களிலும் மனு முதலியோர் சொன்னபலவிதஜாதிபேதங்கள்அநேகம்தேடப்பட்டுங்காணும்

[illegible]

இவ்விதமிருக்க நமது பெரியோர்கள்முடிந்த யுக்தி சொல்வதுயாதெனில். ஐயா? வேதங்களில் பரம்பரையாயிந்த ஜாதிகள் நிர்ப்பதற்குத்தக்ககாரணம் அகப்படாவிடினும், வெகுகாலமாய் வேதங்களில்படிட்பு த்தவறிவருதால் ஒளித்தவேதபாகத்திலெனும் இதற்கு மூலம்,இருந்திருக்க வேண்டியதேஅவசியம்- மனுமுதலிய தர்மசாஸ்திரக்காரர்கள் சத்தியவாதிகள் ஆகையால் அவர் சொன்ன வசனங்கள் சத்தியமாகவேகோள்ளற்பாலன- பிரமாணமின்றி யாதும் சொல்வதுஅவருக்குறித்தல்லதே. ஆதலால் அவர் எழுதியமூலம் நாம் எளிதில்கண்டுபிடிக்கக்கூடாதாயினும்ஏதோ ஒருவேதபாகத்தில் இருக்கவேண்டுமென்றே ஊகிக்கவேண்டியது- என்பதுமேலும் [illegible] சாகைகள் அநந்தங்களாதலாலும் புருஷர்கள் குற்றத்தாலும் அநேகம்பிரகரணங்களிலுள்ளனவாதலாலும் ஸ்மிருதிகளுக்கு மூலங்கிடைக்கவில்லையென்றும் “[illegible]” இப்பொழுது நாம் அறிந்ததை மறப்பதும், புஸ்தகங்கள்கெட்டுப்போவதும் காணப்படுகின்றனவல்லவா? “[illegible]”, முற்றிலும் நாசமில்லையேனும் மனிதர்களுக்கு சொம்பல்சொல்குற்றம இவையுள்ளனவே. புருஷர்கள் மாள்வது இயல்பே- இது முதலிய பல பிரமாணங்கள் சொன்ன விஷயத்தில் எடுத்துரைக்கிறார்கள்- ஆபஸ்தம்ப சூத்திரத்தின் உரையாசிரியரான ஹரதத்தாசாரியர் எடுத்துரைத்த இவ்வியுக்திகளை மறுத்து தந்திரவார்த்திகமென்னும், மீமாஞ்சை என்கிறசாஸ்திரத்திற்கு வார்த்திகம், செய்தவர் இவ்விதம் எழுதியதுகாண்க- “இறந்தவனைசாக்ஷியாக்குவதுபோல் மறந்தசாகைகளைப் பிரமாணமாகக்கொடல் முற்றிலும் பொருந்ாது- அவ்விதம்கூடுமேல் எவரெவற்கேது தோன்றுமோ அவைகளைத்திற்கும் மறைந்துபோன வேதமே மூலமாக நேரிடும்,, என்றும் மற்றோரிடத்தில்“ எவ்விதம் மூயன்றும் மனுமுதலியோர் தாம்ஸ்மிருதிகள் எழுதினரோ அவ்விதமேஅவரவர் வார்த்தைகளுக்கு மூலமாயுள்ள வேதவாக்கியங்களை ஏன் எடுத்து வெளியிட்டாரில்லை-,, என்று “ எவனுக்கு எதுஅபிப்பிராயப்படுமோ அதைமறைந்தவேதத்தின் தலையிலிட்டு பிரமாணமாகக்கொள்ளும்படி நேரிடும்,, என்றும் விளக்கினர்- ஸ்ரீமான் ஆபஸ்தம்ப முனிவரும்“ [illegible]” பிரமாணங்களில சொல்லப்பட்ட விதிகளின்மூலம் மறைந்துபோயினும் அவைகளை பிரயோகத்தாலனுமிக்கலாம்- எவ்விடம்தமது மனமே பிரவிருத்திக்குமோ அங்கு சாஸ்திரமில்லையாதலால் அவ்விதம் செய்பவன்நரகத்தில் வீழ்வான்,, என்றும் குமாரிலபட்டாசாரியரும்“எவர்கள்மனு முதலியஸ்மிருதிகளுக்கு மறைந்தவேதங்களை மூலமாகக்கொள்வரோ அவர்களைக்கண்டு சாக்கியரும் தம்ஸ்மிருதிகளை அவ்விதமே நாட்டுவார்கள். எவர் தான் மறைந்துபோனவேதங்களை இவ்வளவு என அளவிட வல்லவர். ஆதலால்ஏது சிலகாலமேனும் சிலர் ஆதரிக்கப் பதம்பெற்று பிற

[illegible]

குமறைந்ததனவேன எண்ணத்தக்கினவோ? அவைகளில் சொல்லிய சங்கதிகள் இப்பொழுது நாம்படிக்கும் வேதங்களில்இல்லாவிடினும் மூலமிருந்ததேயென்று எண்ணத்தக்கதாகும். வியாசாசாரியர் முதலியவரும், “வேதம் தர்மசாஸ்திரம் புராணம் இவற்றுள் ஒன்றுடனொன்று பொருள்வேற்றுமையடைந்தால் முன்னுள்ளதே பிரமாணமென ஒப்பினார்கள். ஸ்மிருதிகளும் புராணங்களும் சிலபுருஷர்களால் எழுதப்பட்டன ஆதலால் ஆங்கு மயக்கம் வஞ்சகம் முதலிய சில துர்க்குணங்கள் இருக்கக்கூடும் என்பதவர்கருத்து- ஸ்மிருதிகளும் புராணங்களும் புத்திமான்களான பெரியோர்கள் செய்தனவாதலால், அவைகளை ஆதரிக்கவேண்டியது நமக்கவசியமே. ஆயினும்அவைகளில்கண்டநியமங்கள் சிலபுருஷ புத்திமான்களேர்ப்பாடானபடியால் நமக்கு சௌகரியமாய் தன்புத்திக்குவிரோதமாய் உள்ளவை தள்ளத்தக்கினவையே. அதுகொண்டேமனு “வேதம் அனைத்தும் தருமத்தின்மூலம். அவ்விதம்அதையறிந்தவர் செய்த ஸ்மிருதியும், அவர்கள் அனுஷ்டானமும், மற்றப்பெரியோர்கள் செய்கையும் தமது புத்திப்பிரவிருத்தியும் தர்மமூலம்-,, என்று தமது புத்திப்பிரவிருத்தியும் தர்மமூலங்களில் ஒன்றென்று சொன்னதறிக.

ஆகையால் நமது மதத்தின் முக்கியப்பிரமாணமான வேதங்களில் இக்காலத்தவர் சொல்லும் ஜாதிபேதங்கள் ஒன்றும் காணப்படாமையால் அவைநமது மதங்களுக்கு அங்கங்கள் அல்லவென்பது திண்ணம். அதுகொண்டே நமது மதத்திற்கு ஒருவேளையிலும்கெடுதி செய்வதில்லையென பிரதிஞ்ஞை செய்துகொடுத்த இங்கிலீஷதுரைத்தனத்தார் நமது ஆசாரவிஷயங்களில் சிலசீர்திருத்தம் செய்வதும் சிலஅனுசிதாசாரங்களை அனுஷ்டித்தால்-அவர்களைத் தண்டிப்பதும் உசிதமேயாகும்- ஆயினும் அவர்செய்வது நியாயமா? அல்லவாவென்று ஆலோசிக்கவேண்டியவிஷயமே- ஏன்? எனில் ஜாதிமதத்திற்கு அங்கமாகாமற்போயினும், நீடுழிகாலமாய் பெரியோர் வழிமாறாது அனுஷ்டிக்கப் பட்டுவந்து நிலைபெற்ற இவ்வாசாரம் பொதுஜனக்கட்டுக்களாதலால், அந்நியமம் அநேக ஆயிரவருஷங்களாக இவ்விடம் நிலைபெற்றுவருவது எல்லோரும் அறிந்தவிஷயம்- ஹிந்துஜனங்களுடைய ஒவ்வொருவிஷயமும் அக்கட்டையனுசரித்துத்தான் இப்பொழுது நடந்துவருகிறது. ஆகையால் அதுவிஷயத்தில் எந்தஅதிகாரிகளும் ஆலோசித்தே பிரவேசிக்கவேண்டும்- ஜனங்களின் பொதுநன்மையை நாடும் இவர்கள் ஜாதிநியமங்களைச்சீர்திருத்த சட்டங்களேற்படுத்தும்விஷயத்தில் பின்வாங்குவது அத்தேசத்தில்ஜாதி மதங்கள் கலந்திருப்பதுகொண்டே என்று அறிகிறோம். ஆயினும்அவ்வெண்ணம் உண்மையிலுள்ளதல்ல-இவ்விந்துதேசத்தில் பிரயோஜனமற்றதும்நல்லபிரயோஜனமில்லாததும்ஆகிய சிலசங்கேதாசாரங்களையும்ஆங்கிலேயர் தள்ளாமலிருப்பது ஏதோ ஒரு ஆலோசனையினால் என்றுநம்புவோம்-

நமதுதேசத்தில் ஆதிகாலத்தில்ஜாதிகள் உண்டான காரணம் யாது? எனில் வெவ்வேறுவம்சங்களில் பிறந்தமனுஷியர்கள் ஒருவருக்கொருவர்விரோதத்தால் தாம் மற்றவருடன் சந்திக்கக்கூடாதென்றெண்ணி சரீரத்தின் நிறத்தைக்கொண்டு ஜாதிகள்ஏற்படுத்திக்கொண்டதாய் ஆங்கிலேயர் அனுமானிக்கின்றனர். வெண்ணிறங்கொண்டவர் கருத்தமேனியருடன்எக்காலமும்விரோதம் பாராட்டிவந்தனர். அவர்கள் ஒரு சமயம்சேரும்படிநேரிட்டால் முற்கூறியவெண்ணிறத்தோர் தாம் உயர்வடையும்பொருட்டு மற்றவரைத் தமது கூட்டினின்

[illegible]

ன்று விலக்கினர்கள். அதுகொண்டே முக்காலத்து ஆரியர்க்ள் சூத்திரர்களிடம் இவ்வளவுகோபம் வைத்திருந்தனர். ஸம்ஸ்கிருதபாஷையைக்கொண்டு விவகாரஞ்செய்துவந்த ஆரியரிலும் வேறானதோரணிபர் என்னும் சிலவகுப்பினரால் இவ்விந்துதேசம் ஆக்கிரமிக்கப்பட்டது. இவர்கள் ஆரியர் அவமதிப்பால் வடநாடிழந்து தென்னாட்டில் புகுந்து ஆங்கு குடியேறினர்கள். அதுகொண்டே தென்னாட்டிற்குரிய பாஷையாகிய தமிழ்பாஷையைமூலமாய்க்கொண்டு அன்னாட்டில் வழங்கிவரும் தெலுங்கு கன்னடம், மலையாளம் என்கிற பாஷைகளும் ஸம்ஸ்கிருதபாஷையில் பிறந்த பாலீ மாருடி ஹிந்துஸ்தானி, பங்காளி, முதலியபாஷைகளுக்கும் வேறாய் நன்கு காணப்படுகின்றன. எக்காலம் வடநாட்டைவிட்டு தென்னாட்டில் ஆரியர்கள் வரத்துடங்கினரோ அப்பொழுது இவ்விடம் முன்னிருந்தவர்க்கும் இவர்களுக்கும் வெகுவித வித்தியாசங்கள் காணப்பட்டன. அது இப்பொழுதும் உற்றுநோக்கினவர்களுக்குணரத்தக்கினவையே. நாம்முற்கூறிய சூக்தம் தவிர மற்ற வேதமந்திரங்களில் எவ்விடத்திலும் சூத்திரர் என்கிற பதம் காணப்படவில்லையாயினும், ஆரியர்களுக்கெதிரான இச்சாதிபார்தஸ்யு என வழங்கப்படுகிறார்கள் "[illegible]" என்கிற மந்திரத்தில் தஸ்யு என்கிறபதம் சூத்திரர்பால் நின்றதென்பது கருத்து. இம்மந்திரத்திலுள்ள வர்ணம் என்கிற சப்தம் நிறத்தையே குரிக்கும். அவ்விதமே பலவிடங்களில் உதாகரிக்கப்படுவது காண்க. "[illegible]" இந்தமந்திரங்களில் உள்ள வருணம் என்கிற சப்தம் நிறத்தையே குரிக்கின்றது. அதுகொண்டே ஆதியில் நிறங்களைகுரிக்கும் தன்மைபெற்ற வருண சப்தமே பிறகு பிராமணர்முதலியோர் ஜாதியைக்குரிக்கும் தன்மையையும் பெற்றதென ஊகிக்கக்கூடும். மகாபாரதத்தில் பிராமணர்க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களுக்குமுறையே, வெண்மை, சிகப்பு, பொன்னிரம், கருப்பு என்று எழுதியதும் தற்காலத்து ஜாதிகளை வேறுபடுத்தவே என்றறிக. இவ்வர்ணசப்தத்தை ஜாதியைக்குறிக்கும்படி வேதத்தில் வழங்கிய காலத்தில், ஆரியரெனவும், அனாரியர், எனவும் இருவகை ஜாதிகள் இருந்தன. அதில் அனாரியஜாதிஒருவித (கிருஷ்ணத்வக) கருப்புத்தோல் என்றே வழங்கப்பட்டது. "[illegible]" என்கிறமந்திரத்தில் அவ்விதமே அப்பதம் பொருள் பெற்றது. இவ்விடம் கருப்புத்தோல் என்கிற பதத்தால் ஆரியஜாதியின் பகையினரான அனாரியஜாதியரே சொல்லப்பட்டார்கள். என்றறிக? ஜயித்து வரும் ஆரியவருணத்தவர்க்கும் அனாரியருக்கும் இருந்தபேதம் இம்மந்திரத்தை ஊன்றிப்பார்த்தால் தெரியும். (☞ மற்றேநமந்திரம் வடமொழியில்காண்க) ஆதிகாலத்தில் சுக்கில சோணிதங்களின் வேறுபாட்டால் உண்டான சரீரநிறம் ஒன்றே காரணமாய்க்கொண்டு

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

ஏற்பட்டன; ஆரியர் என்றும் அனாரியரென்றும் இருவகை வேறுபாடுகள். அதுவே சில காலஞ்செல்லவே முக்குலத்தவர் ஆரியரெனவும் நான்காம்வருணஸ்தர் அங்ஙனமல்லாதவரெனவும் வழக்கம் உண்டாயிற்று. உயர்ந்தோரைக்குறிக்கும் ஆரியர், என்னும் பெயர்ச்சொல், அபதியையும், வைசியரையும், குரிக்கும் அரியசப்தத்தில் தோன்றியதாய்ச் சொல்லுகிறார்கள். இவ்வாரியர்களே அக்காலத்து ஜனத்தொகையில் அதிகமாயிருந்தவர்கள். அதுகொண்டே அவர் பெயரான ஆரிய சத்தம் மூன்று வகுப்பினரான ஆரியருக்கும்பொதுவாய் வேதத்தில் வழங்கிவருகிறது.

இன்னும் வரும்

மொழிபெயர்ப்பு

ப்ரம்மவித்தியா

மதமும் அதின் பிரயோசனமும் அதி ஆசிரியரும்

[தொடர்ச்சி]

பத்மபாதாசாரியர்சரித்திரம்

சோளமண்டலத்தில் அநேகஆலயங்களால் இருகரைகள்நிரம்ப, பேரும் பெயரும்பெற்று நிலைஉள்ள, நீர்வளம்முதலிய பலகுணங்களுக்குமாதாரமாய் சில விருக்ஷங்கள் ஓங்கிவளரப் பெருங்கருவியாய் ஸஹ்யமென்னும் பர்வதத்தில் பிறந்து, காவேரியெனப்பெயர்பொண்ட ஓர் நதியுண்டு அதின்கரையில், வேதம் புராணம் ஆகமம், ஸ்மிருதிகள், முதலியவற்றில் நன்றுய்ப்பயிற்சியடைந்த பலபிராமணர்கள் குடியேறின ஓர்அக்கிரகாரமுண்டு. அவ்வக்கிரகாரத்தில் ஓர் பிராமணனுக்கு அருந்தவப்பயனாயவதரித்த ஒருகுழந்தைபிறக்க அவரும்அக்குழந்தைக்குசனந்தனன் என்றும் பெயரிட்டார். பிறகு அக்குழந்தை தமது பிதாவினிடம்அன்னப்பிராசனம் முதலிய ஒவ்வொரு ஸம்ஸ்காரங்களையுமடைந்து, மறைமுறைப்படி உபநயனமென்னும்சடங்கையும்பெற்று வாலிபத்திற்குளே பதினான்குவிதமான வித்தைகளிலும் பயின்றுதேன்றார். பிறகு அவரது யௌவனத்தில் அநேகப்பந்துக்களும் சிநேகிதர்களும் அவரை விவாகம் செய்துகொள்ளும்படி கேழ்க, அவர்வைராக்கியத்தால் மறுத்து ஓர் மடந்தையையும் தான் விவாகஞ்செய்ய இஷ்டமில்லாதவராயிருந்தார். பிறகு இச்சம்சாரக்கடலைக் கடக்க, பெருங்கருவியான ஆத்மவித்தையின் தன்மையையறிய ஆவலுற்று அவ்வுண்மையை உபதேசிக்கவல்லவரான ஆசிரியமணிகளைத்தேடி, சிவன்விஷ்ணுமுதலிய, தேவர்களின் புண்ணியாவதாரஸ்தலமாய் வைகுண்டம்,கைலாசமெனச்சொல்லப்படும் திருப்பதிகளுக்கொப்பான பல க்ஷேத்திரங்களையடைந்தும் பல மகாநதிகளில் திருநீராடியும், அவ்வவ்விடங்களில்த்தேடி தன் மனதிக்கிசைந்தஆசிரியன் கிடைக்காது வழியே ஸ்ரீவிசாலாக்ஷி விச்வநாதர் கருணைமாரி பொழியும் இடமாய், ஸ்ரீகங்காநதியின் கரையிலுள்ள, காசிமாநகரத்தைக்கண்டு சுகமுனியின் திருவுருவங்களோவென மயக்கத்தக்க பல சந்நியாசிகள், அவ்விடம் அத்துவைதவித்தியாவிசாரஞ்செய்வதைக்கண்டு, அவர்களிடம்சென்று, இதற்குக்காரணம் இன்னதென்றுவினவ, அவர்களும் தென்னாட்டில் பிறந்து, இன்னாட்டாரை ஆட்கொள்ள அத்துவைத வித்தையே உருவெடுத்ததெனச் சொல்லத்தக்க எமதுதவப்பயன், ஸ்ரீமத் பகவத்பாத சங்கராசாரிய ரென்னும் திருநாமமேவிய ஓர் துறவிமன்னவன் இவ்விடமிருப்பதேயென விடைபகர்ந்தனர் அதைக்கேட்டு ஆநந்தமடைந்து அவரது சந்நிதானத்திற் சென்று

[illegible]

அவரது திருவடித்தாமரைகளைத் தமது சிரமீதிற்சேர்த்து தமக்குஅத்துவைத சித்தாந்தத்தை உபதேசித்து, தம்மைத்தன்னிய னுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள தமது அடியில்சரணுகதிசெய்த அச்சீஷனை மனமகிழ்ந்து எடுத்தணைத்து, குழந்தாய்! நீயார்? யாதுஉன்பெயர்? யாதுஉன்ஊர்?எங்குவந்தாய் என? ஆசாரியஸ்வாமிகள் அனுக்கிரகிக்க தாமும் தமதுவரலாற்றைச்சிறிது சுருக்கி, ஆசிரியார்சந்நிதியில் விஞ்ஞாபனம் செய்யஆசாரியஸ்வாமிகள் மனமகிழ்ந்து, இவரதுவைராக்கியத்தைப்புகழ்ந்து சம்சாரத்தையிகழ்ந்து, அவருக்குசந்நியாசஆசிரமத்தை கிரமமாகக்கொடுத்தருளினர். அதுகொண்டு அவரே பகவத்பாத சங்கராசாரியஸ்வாமிகளுக்கு முக்கியசிடர்களுள்முதல்வரெனச் சொல்வது. பிறகனேகர்ஆசாரியஸ்வாமிகளுக்கு சீடராயினர். ஆசாரியஸ்வாமிகளும் தம்மிடம் அச்சனந்தனமுனிவர்வைத்த பேரன்பிற்கிசைய, தமதுபாஷியத்தைக்கருணைகூர்ந்து மூன்றுதடவை உபதேசித்தருளினர். பிறகு ஒருக்கால் ஆசாரியஸ்வாமிகளுக்கு இம்முனிவரிடமிருக்கும் பேரன்பைக்கண்டு, பொறாமையடைந்த மற்றவர்களுக்கு இவரதுகுருபக்தியின் பெருமையை முற்றிலும்விளக்கக்கருதி, கங்கையின்ஓர்கரையில் நின்று, மற்றொருகரையிலிருக்கும்,சநந்தனமுனிவரைஆசாரியஸ்வாமிகள் உடனேவாவென்றழைக்க, அம்முனிமணியும் சம்சாரமென்னும் ஓர்பெருங்கடலை கரையேற்றும் வலிமைபெற்ற நமது ஆசாரியனடிமலர்கள் நம்மை இவ்வாற்றின்கரையேத்துமென நம்பி, அவ்வாற்றிலிறங்கி, விரைவாய் நடந்துவர, அம்மகாநதியின் நடுவில் ஆச்சரியமாய் இவரடிவைக்குமிடங்களில் ஒவ்வொருதாமரைமலர்களுண்டாய் இவரது திருவடிகளைத்தாங்கின. உடனே ஆசாரியன் திருவடிகளைப்பணிந்து நின்ற அம்முனிவரை ஆசாரியஸ்வாமிகள் அணைத்தகமகிழ்ந்து, தாமரைமலர்களின் தலையிலடிவைத்த வனே உமக்குநாம் பத்மபாதரெனயோக்கிய நாமமளித்தோமென, உகந்தருள, அன்றுமுதல் அம்முனிவருக்கும்பத்மபாதரெனப்பெயர்வழங்கிற்று. பிறகு, அவ்வாச்சரியத்தைக்கண்ட மற்றவரும் தமதுபொறாமையையொழித்தனர்- பிறகுஅவ்விடத்தில்சிறிதுகாலம்வசித்து, ஆசாரியஸ்வாமிகள்திக்விசயம் செய்யஅவ்விடம் விட்டபொழுது, தானுமவருடன் கிளம்பி;காச்மீரமண்டலத்தையடைந்தனர். பிறகு ஆசாரியச்வாமிகள் மண்டனமிச்ரரைஜயித்து, சரசவாணியை வெல்ல பரகாசப்பிரவேசஞ்செய்ய உத்தேசிக்குங்கால், மச்சேந்திரயோகிஎன்பவர்மறுசரீரத்தைப்பிரவேசிப்பதைப்புகழ,தாம் அனுசிதமெனக்கொண்டு, ஆசாரியனுடதேசித்த, உண்மையறிவால், பிறகு அவ்விஷயத்தை ஒப்பினர் அமருசன் சரீரத்தால் பிரவேசித்த அவ்வாசாரியின், பலசுகங்களை அனுபவிப்பது குறித்தகாலத்தில், வாராதிருத்தலைக்கண்டு அக்காலத்தில் அவ்வாசாரியருக்கு, சிலசங்கதிகளை க்குறித்துக்காட்ட தாமொருபெரியஆலோசனைசெய்து, பாடகர்வேடங்கள் கொண்டு தன்னுடன் உள்ளவர்கள் ஆநந்திக்க ஆசாரியார் திரும்பிவரச்செய்து அவர்கள் சரசவாணியை ஜயித்து பிறகு அவ்விடம் விட்டுப்புறப்பட்டனர். நடுவழியில் கிருட்டிணநதியினருகில் ஆசாரியஸ்வாமிகளை பலிகொடுக்கஉத்தேசித்த ஓர்கபாலிகனை தான்முன்னமே அசோபிலகுகையில், தவஞ்செய்தபொழுது நமக்கருள்புரிந்த நரசிம்மனை, ஒருவாறுதியானித்து, அவரதுதிருவருளால் தாமவரதுதிருமேனியைத்தாங்கி அக்காபாலிகனை சம்ஹரித்து,ஆசரியசரீர ரக்ஷகரெனப்பெரும்புகழடை

[illegible]

ந்தார். பிறகுதாம்சேதுயாத்திரைசெய்யக்கருதி ஸ்ரீங்கேரியிலிருந்து தமது ஆசாரியஸ்வாமிகளிடம் ஆஞ்ஞைபெற்று, யாத்திரையாய்ப்புறப்பட்டுவருங்கால், சிலசீஷர்களுடன் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தின்சமீபத்தில விளங்கும், தமதுபூர்வாசிரம மாதுலகிரகத்தையடைந்து, பிரபாகரமதத்தைச்சேர்ந்த சிலருடன்விவாதித்து, அவ்விடம்வந்த தமதுபந்துக்களுக்குத்தத்வோபதேசம்செய்து, ஒருதினமங்குவசித்து அவ்விடம்விட்டுப்புறப்பட்டார் அப்பொழுது, இவர்சீடர்களில் சிலர்வகித்துவரும் புஸ்தகத்தைக்கண்டு, அம்மாதுலர் இதுயாதெனவினவ, அப்பதம்பத்மபாதாசாரியார் எமது ஆசாரியஸ்வாமிகள் திருவாக்காகிய, பிரம்மசூத்திர பாஷியத்துக்குத்தாம்செய்த சிற்றுரையைவிளங்க, விடைபகர்ந்தார். அதுகேட்ட அம்மாதுலர் அப்புத்தகத்தை என்னிடம் சிலதுகாலம்வைத்து, எவ்விதமேனும்யாத்திரை செய்து வரும்பொழுது, இவ்விடம்வந்தால்,இதைத்தம்மிடம்சேர்ப்பேன்- ஆகையால்என்னிடம் அப்புத்தகம் கொஞ்சகாலமிருக்கவேண்டுமென க்கேட்டுக்கொள்ள, அவ்விதமேபுஸ்தகத்தை அவ்விடம்வைத்துவிட்டு, தாம்அவ்விடம்விட்டு, ஸ்ரீராமேசுவரஞ்சென்று, சேதுதரிசனம், சமுத்திரஸ்நானம், ராமேசுவரத்தில் பரமேசுவரஸேவை, முதலிய வற்றைமுடித்துக்கொண்டுதிரும்பினர்- அகஸ்தியாசிரமத்தில், அகஸ்தியரைக்கண்டு, மிகவணக்கமாயவரையுஞ்சேவித்தார்- இதன்னடுவில், இவரது மாதுலர் பத்மபாதாசாரியர் எழுதிய டீகாகிரந்தமானது, தமதுகுருவாகிய பிரபாகரர்எழுதிய கிரந்தத்துக்கு, முற்றிலும்விரோதமாய், அம்மதத்தைமுற்றிலும்ஜபிக்கத்தக்கதாயுமுள்ளதைப்பார்த்து, அதில்பொறாமைகொண்டு, அப்புத்தகத்துடன் வீட்டைநெருப்பிட்டுச்சுட்டார்- பிறகு அவ்விடம்வந்த பத்மபாதாசாரியார் இச்சங்கதிகேட்டுமிகவும்மனவருத்தமுற்று, வேறுசிந்தையிலலாமல், தமதுஆசாரியனை ஸ்ரீங்கேரியில்வந்து கண்டு, தமதுகிரந்தம்போனவழியைச்சொல்லி வருத்தமடைந்தார். அப்பொழுதுஅதைக்கேட்ட ' ஆசாரியார் அப்பா? வீணில் வருத்த முறவேண்டாம்நீஎழுதியபுஸ்தகத்தை, ஒருவாறஐந்து பாதம்வரையில்யாம்பேட்டதுண்டு, அதை இப்பொழுது சொல்லுவோம் எழுதெனஆஞ்ஞாபிக்க, அவ்வாறே ஆசரியனுஞ்ஞைக்கடங்கி அப்பத்மபாதமுனிவர் அந்தக்கிரந்தத்தை எழுதினர்- பிறகு, ஆசாரியர்களுடன் வெகுகாலம்வசித்து, ஆசாரியரின்நியமனப்படி, அவர்கள்கைலாசயாத்திரை செய்யும்பொழுது தாம் ஜகந்நாதத்தை யடைந்து, அவ்விடத்திலிருந்து வைதிகமதங்களைவெளிபிட்டுக்கொண்டு, அங்கிருந்தேதமது காலத்தைப்பின்னிட்டனர்

திருவநந்தபுரத்தில்ஸாரஸ்வதமதஸமாஜத்தில் ஸ்ரீமான் ராஜ ராஜ வர்மா அவர்கள் செய்தஉபந்நியாஸம்

ஐயா

சென்ற ஞாயிற்றுக்கிழமைதினம் பெருமைதாங்கிய,ள்தங்கமேலானகணத்தால் சிறுவனுன நான் கல்விப்பயிற்சில்சிறந்தபெரியோர்கள்செய்யத்தக்க,ப்பிரசங்கம் என்னும் பெருஞ்சுமையைத்தாங்கும்படி, ஆஞ்ஞாபிக்க, ப்பட்டேனல்லவா? நான்இவ்விதபெரும்பழக்கம் இல்லாதவனுயினும் நுட்பமான அறிவுவலிமையடையாதவனுயினும், இச்சபையில் நிறைந்திருக்கும்

[illegible]

பெரியோர்களனுக்கிரகபலத்தால், இவ்வேலையைமுடிக்கலாமெனநான்முயன்றேனன்றி, வேறில்லை. ஐயா? நம்தேசத்தில் ஆங்காங்கு பிரவகிக்கும்சாதாரணமான நதிதீர்த்தமும், பேரியோர்கள்செய்யும் மந்திரசம்ஸ்காரபலத்தால், கங்காநதியின் தீர்த்தத்திலும் மிகஉத்தமமாய் சகலபாவங்களையும் போக்கடிக்கத்தக்க பெருமைபெறவில்லையா? நான்எடுத்துரைக்கவேண்டிய, விடயத்தைப்பற்றிதாங்கள் என்னிட்டப்படிசெயயும்படி உத்திரவு செய்தபடியால், யான்எனது கல்விக்கிணங்க [பாஷோத்பத்தி]என்பதைவிஷயமாக எடுத்துக்கொண்டேன் நண்பர்களே!!

இவ்வுலகில் ஒவ்வொருதேசங்களிலும அவற்றிலுள்ள ஒவ்வொருநகரங்ளிலும் வேறுபட்டு வெவ்வேறுவிதஉச்சரிப்பும் வேறுவிதஇலக்கணங்களும் வெவ்வேறுவிதநடையும் பெற்றும் ஒன்றுக்கொன்று, முற்றிலும் வேருய் எண்ணிறந்தபாஷைகள் உலாவிவர நாம்காண்டோம் என்பதில்ஏதேனும் சம்சய முண்டா? ஆனுல்உலகில் இவ்வளவுபாஷைகள் உண்டாகிஆங்காங்கு, உலாவிவருவதர்க்குத்தகுந்தகாரணங்கள் இன்னதுஎன்றுயாம்ஆலோசிக்கவேண்டியதாயின், அதில்பலவகையிருக்கக்கூடுமாதலால்,சிலசங்கைகள் நிகழ்கின்றன. 1-அவ்வுலகெல்லாம்படைத்தபரமான்மா ஆதியிற்றுனேதம்மால்,சிருட்டிக்கப்பட்ட சனங்களின்உபயோகத்திர்க்காக வேண்டி' பாஷைகளையும் அவர்களுடன் கூடவேசிருஷ்டித்திருக்கலாமோ? அல்லது
2- அப்பரமனுல்படைக்கப்பட்ட ஜனங்களே தம்முடையவிவகாரங்கள் பாஷையில் லாமல் அமைவது மிகக்கடினமாதலால், தமதுபுத்திக்கூர்மையால், தற்காலம் அநேககட்டிடங்கள் அநேகவிதவண்டிகள், பலவிதமரக்கலங்கள், ரயில்வண்டிமுதலியயந்திரங்கள். இவைகளைக்கண்டுபிடித்ததுபோலவேகண்டுபிடித்துவழங்கிவந்தார்களா?

இவற்றுள்முதற்கூறியபடி ஒப்டவார்சிலர். அவர்கொண்டவழியாதெனில், பற்பலவிசித்திரவஸ்துக்கள். நிறைந்த இப்பூமண்டலத்தில்மனுஷ்யன்செயலைத்தாண்டிய பலபதார்த்தங்களைநாம்காணக்கூடுமாதலால், அவ்விதவஸ்துக்களில் பாஷையுமொன்றெனநம்பவேண்டியது. மனிதர்களின்புத்தி மற்றஜந்துக்களின்புத்தியிலும், அதிகநுட்பமுள்ளதேனும், இப்பேர்க்கொற்றவிஷயங்களில்இது நிலைபெருது.யாம்கண்ட மட்டிலுலகத்தில வெகுஅருமையான சாஸ்திரங்களைக்கற்றுஎங்கும்புகழ்பெற்று,வித்துவச்சிகரமணிகளில் ஒருவரேனும் ஓர்பாஷைகளைக்கண்டு பிடித்தவரென, வழங்கப்பட்டதைநாம்கண்டோமில்லை. கதைகளிலேனு, மற்றவர்எழுதிய பெரியோர்கள்சரித்திரத்திலேனும், கேட்டதுமில்லை. ஆதலால் இப்பாஷைஎன்னும், சங்கேதம் அநாதியிலுள்ளதேஎன்பது- அதின்பேரில்.மும் விநாக்கள்- ஐயா? கருணைக்கடலாய கடவுளேதான்உலகைப்படைத்து அதில்இருக்கும் ஜனங்கள் தம்முள்ளத்தில்தோன்றும் ஒவ்வொரு அபிப்பிராயங்களையும், பிறர்க்குத்தெரிவிக்க வலிமையற்றவதென்றுணர்ந்து மிகக்கிருபையுடன் அவர்களுக்கென, ஓர்பாஷையை உண்டாக்கக்கருதி,விவகாரத்திற்கு வேண்டியஎல்லாச்சோர்களும் அடங்கியஒருபெரிய கோசமும்; பலவேற்றுமைகளமைந்தசொற்களுக்குஅவசியமானஓர்இலக்கணமும் முற்றவினைப்பகுதிகளைக்குரிக்கும் ஒருதாதுபாடமும்தாமே ஏற்படுத்தி எவ்விதமேனும்நமதுஜனங்கள் பேச்சுனுல் உண்டாகும் அகங்களை அடையவேண்டும் என்றெண்ணி, ஆகாயத்தினின்று கீழேவிழச்செய்தாரோ? வல்லதுஇப்ரெரும்பூமி, ஆகாயம்; முதலியவற்

வஜ்ரஸூசீ:

[illegible]

றைப்படைத்ததுபோலவே இந்தபாஷைஎன்பதையும்சிருட்டித்தன்ரு? அல்லது. இதுவும்அவர் ஆதிசிருஷ்டியிற்றுனே தோன்றியதா? அல்லது தாம் ஆதியில சிருட்டித்தசிலருக்குஉலகத்திலுள்ள சாதாரண ஆசாரியர்கள் போல் பிரமதேவன் என்பவர் முதலெழுத்து முதல் கடையெழுத்து வரையில் கற்பித்தனரா? என்டன. இவற்றுள் முதலில் எடுத்துரைத்தும் ஈற்றில் கூறியதும் முற்றிலும் அறியாத மூடர்களுக்கே ஒப்பத்தக்கதே ஒழிய வேறில்லை; ஆனுல் இவ்வுலகில் காணப்படும் எல்லாவித சாஸ்திரங்களும் அதற்குள்ள கோசங்களும்மற்றபடி பாஷையைச் சேர்ந்த எல்லாம் பரமேசுவரன் சிருட்டித்ததே என்று நீர் உருதியாய்ச் சொல்வீராயின்; நாமும் இப்பொழுது நமது கண்ணுக்குப் புலப்படும் பெரிய ஆச்சரியமான பூமண்டலமும மற்றும் உள்ள பிரபஞ்சம் யாவும், நேற்ருே அல்லது ஒருதினம் முன்னேயே பரமேசுரன் சிருட்டித்தான் எனச்சொல்வேன் இதற்கு யாதுகாரணமெனின், தாம் சொல்வதற்கு எதுகாரணமோ? அதுவே "அதாவது காரணமில்லாத வார்த்தையாய் அது முடியும் என்பது கருத்து,, இரண்டாவதும் அவ்விதமே ஏம் எனில் பதார்த்தங்களைப் பகுத்தறிவிக்க வெழுந்ததாக சாஸ்திரத்தில் பதார்த்தங்கள் ஏழுவகை உள்ளனவென சித்தாந்தப்படுத்தியிருப்பதால் மூன்றுவதோ! கேள்விக்கு மாத்திரத்தில் இனிமையாய் இருக்குமன்றி வேறில்லை- ஆராயுங்கால் பாஷை என்பது சப்தம்ஆதலாலும் அது குணங்கள் இருபத்தினுன்கனுள் ஒன்ருதலாலும், பரமான்மா ஆதிசிருஷ்டியில் சப்தம் ஒன்றையே சிருட்டிக்கவேண்டும், அதின் உட்பிரிவான பாஷைகள் அவர் சிருட்டியில், அடங்கின தல்ல அவ்விதம் சங்கேதம் செய்துகொண்டவர் மனுஷர்களே! இப்பொழுதும் குணம், விருத்தி முதலிய பற்பல பரிபாஷா நாமங்களை அனேகர் ஏற்படுத்தி வழங்கி வருவதைக்கண்டேயமல்லவா அதுகொண்டு ஆருயுங்கால் இந்தப் பாஷை என்பதுமனிதர்ஏற்படுத்திக் கொண்டஓர்வகை சங்கேதமேயொழிய வேரில்லையென்பது துணிபு-

பாஷை என்பது யாது?

நமதுள்ளத்தில் தோன்றும் சங்கதிகளை வெளியிடும்சருவிஅவ்விதம் சரீரசேட்டைகள் உதவினும் இப்பாஷை உதவுவதுபோல் மற்றவை ஒருக்காலும் ஆகா ஆனுல் மனதில் ஓர்சங்கதி உதிக்கும் பொழுதே அதின் பெயருடனே உதிக்கிறதே "இன்றுகாலையில் எழுந்து நமது வேலைகளை சீக்கிரம்முடிக்கவேண்டும்மாலையில்சமாஜத்துக்கு போகவேண்டும்,,என்பதுபோல் எழுதும் எண்ணங்களும சத்தங்களும் உள்ளபடி வேறுபட்டனவே எப்படி எனில் குழந்தைகளுக்கு பாஷையறிவு இல்லாமற்போயினும் அவர்களுககு எண்ணங்கள் இருப்பதால்,

மொழிபெயர்ப்பு வரும்.

௨

ஆகாயவாதம்

பூதபௌதிகங்களாய வுலகப்பொருளெனைத்தினுஞ்சத்தென்பதுண்டென்பதுண்மையேயாம்- சத்தெனினு, மின்மையெனினுமபாவமெனினு மாகாயமெனினுமமையும்- சத்துளதன்ருகத்தோன்றிடதேனுமுண்டென்பதே துணிபுடைத்து- யாஙனமெனின் நன்றுவிளக்குதும்-

சுவர்கட்டிய ஞான்று அதன்கண்உளதாய ஈரத்தையுட்டினவாயுவெளிப்படுத்துவதென்பதுதிண்ணம்- சத்தென்பதாண்டையின்றேலீரம்வெளிப்பட்டதெங்ஙனம்? ஒருவாற்ருனுமின்றேயாம். இருப்புப்பாத்திரமுதலியவற்றை யுனலிட்டெரி

[illegible]

க்குங்கால்-கீழ்ப்படக்சத்தே டடுங்கனலின் சூடுபேலைட்பக்சத்தே த்தோன்ற க்கண்டுள்ளாம். இதனுனேய ட்பாத்திரத் திரதநின்சனுளதாய சங்கானன்று அச்சூடேழுந்ததாக த்தெரிகின்றும்- அற்றேலற்றுக! இனிமிக்கவிடம் பெறுவதாய ஒர்பார்ப்பஞ்சினையந்திரத்தினழுத்தவப்ப ஞ்சேசிறிதிட த்தினடங்குவதை க்கண்டுள்ளாம். வாளாவைத்தககால்மிக்க சந்தும்ய ந்திரத்திலழுத்தியகாலைசிறிது சந்துமுளதாகத்தோன்றும்- இங்ஙனமேபொருள்கள் நெருக்கமின்மையானே மிக்கசந்து மஃது ண்மையானேகுறைவு முறகாண்கின்றுமென்று? அற்றுக லின் சந்தின்றியாண்டுமெய்ப்பொருளுமின்றென்டதே துணிபென்க- மலை, கருங்கற்பாறையேனு மதன்கணின்றும்புனல் பெருக்கக்காண்கின்றுமன்று? சந்தியாண்டுளதோ ஆண்டைப்பொருணிசழச்சி யின்றென்க. சல்லடையின்கண் சந்தும் பொருளுமுண்டென்பது திண்ணம்- சந்துளதாயவிடத்துவே யின்று- வேயின்கண்சந்துளதாம். இங்ஙனயேசெங்கல்லோன்றனையாயுமிடத்துச்சந்தும் பொருளுமுள்ளன. சந்துளதா மிடத்து ச்செங்கல்லென்ப தொன்றின்று- அச்சந்தொழிஇ ங்ஙனமே பொருள்கள் நெருக்கமின்மையானே மிக்கசந்தும ஃது துண்மையானேகுறை வுற க்காண்கின்றுமன்று. அற் றுகலின் சந்தின்றியாண்டு மெய்ப்பொருளுமின்றென்டதே ததணிபென்ப. மலை, கடுங்கற்பாறையேனு மதன்கணின்று ட்புனல்பெருகக்காண்கின்றுமன்று? சந்தியாண்டுளதோ ஆண்டைப்பொருணிகழ்ச்சியின் றென்க- சல்லடையின்கண் சந்தும் பொருளுமுண்டென்பது திண்ணம். சந்துளதாயவிடத்துவே யின்று, வேயின்கண்சந்துளதாம். இங்ஙனமே செங்கல்லொன் றனையாயுமிடத்து ச்சந்தும் பொருளுமுள்ளன. சந்துளதா மிடத்துச்செங்கல்லென்ப தொன்றின்று- அச்சந்தொழிந்தவிடத்துச்செங்கல்லின்கண்ணும் சந்துளதாயென்றாராயின் ஆண்டுஞ்சந்துநிக ழ்கின்றது- இவ்வாறுதொடர்ந்துசெல்லின், அணுநிகழ்கின்ற து- அவ்வணுவினையு மாயின்சந்து நிகழ்கின்றது. சந்தொழிய நின்ற அணுவையாயுங்கால், பரமாணுநிகழ்சின்றது. அதனையுமாயுங்கால் சந்துநிகழ்கின்றது- இங்ஙனமேஎம்மட்டுச் செல்லினுஞ்சந்தன்றி எத்துணையணுவினையும்காண்டலரிது சந்துளதாய வழிப்பொருளின்று பொருளுளதாயவழிச்சந்துளது. அசந்தின்றி பொருணிசழுந்தானன்றிப்பொருள்சித்தித்திலது. அற்றுகலின் சந்தின்றிப்பொருள்கிடைப்ப தரிதினுமரிதென்க- இ

பரமாணுவாய வதிநுட்பவணு விற்சந்தின்றென்றப் இடையே சந்துண் ரண்டு பரமாணுசேர்ந்தவிடத்துமாத்திரம் இடையே சந்துண் டென்றும் கருதுவர் சில்லோர். யாதுமிலதாயவெற்றவெளியின்கண் ஓர்தூணினை நிறுத்திவைப்பின், வைத்தற்குமுன்ன ர்திரப்பிமுற்று மாண்டிருந்த, இன்மைஎங்சேனுமோடிட்டபோயதோ? துணினைஎடுத்து விடின்பெயர்த்தும் அவ்வின்மை எங்கெய்தியதோ? இரண்டுமின்ற- ஆண்டிருந்தவின்மை யாதெய்தும் யாதுகழியினும். வருதல் போதலின்றுய்-துணையினல்பல்பட்டலபரமாணு நிறைந்துளதாகலின்யாண்டும்நிரப்பிய இன்மைபரமாணுவின் சண்யாத்திரமிலதென்ப தொருவாற்று ணுமியம்பலேல்லாதென்க. இவ்வுலகுமுற்றுமின்மையின்மையே பெரும்பான்மையிலதேனுஞ்சிறுபான்மையேனுமுண்மை என்றுவாதிட்பதற்கோலாதென்க. ஆசலின்யாண்டு மாகாய உளதென்பதுபெற்றுப் சத்தாய்த்தோற்றுதல்அதிட்டானத்தை நோக்கியென்ச- அதிட்டானமிஃதென்பதுவேறு

இந்து

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்

ஆன்மாவும் சரீரமும்

விவேகிகளே!

இவ்விஷயத்தைப் பற்றி நாம் சுமார் ஆறுமாச காலமாய் நமது பத்திரிகையில் எழுதிவருவதும், அது விஷயத்தில் சென்ற நான்கு மாச காலமாய் சென்னையில் தோன்றி வரும், "தத்துவவிவேசினி,, என்னும் சுவஞ்ஞான பத்திரிகையின் ஆசிரியர் எழுப்பிய பல ஆக்ஷேபங்களுக்கு நாம் நமது பெரியோர் எழுதிய அரியநூல் களினின்று, நாம் குரு முன்னிலையில் தெரிந்தவிஷயங்களைக் கொண்டு சமாதானம் சொல்லி வருவதையும், நமது பத்திரிகை சளைப்படிக்கும் பத்திரிகா நண்பர்கள் ஒருவரேனும் அறியாதவர் இரார்- இத்தேசத்தின் க்ஷேமத்தையேகோரி, தமது சுவப்பிரயோசனத்தை முன்னிடாது பல ஜனங்களும் அறிந்து ஆனந்திக்கத்தக்க சுதேச பாஷா பத்திரிகைகளை நடத்திவரும் பத்திரிகாசாரியர் களும் இவ்விரு பத்திரிகை களையும் பார்த்து அதிலுள்ள விஷயங்களின் உயர்வு தாழ்வுகளைப்பற்றி தமது தாற்பரியத்தை எவ்விதம் வெளியிடுவாரோ அறியோம். நாம்எழுதிவந்த விஷயங்கள் பலவிருப்பினும், அவற்றுள் சிலபாகங்களை எடுத்து நான்கு வினாக்களாக்கி அவைகளுக்கு விடைகளை "சாஸ்திரியார் கூற்று,, என்று வினாக்களுக்குத்தலையிட்டு முன்னெழுதிப் பின்பு எழுதியதை சென்ற மார்ச்சு மாதம் 20-ம் தேதி பிரசுரமான ஷை பத்திரிகையில் கண்டுகளித்து "அரவசிகர் களுடன் விளையாடுவதிலும் ரஸிகர்களுடன் சண்டைசெய்வதே மேல் என,, வழங்கும் பழமொழியை அனுசரித்து அப்பத்திரிகாசாரியர் எழுதிய விஷயங்களுக்குப் பதிலெழுத எழுந்தோம். அதில் அவர் எடுத்தவிஷயங் களெல்லாம் சொற்குற்றங் களாய் அவர் எண்ணினவையே அல்லாதுபெரும்பாலும் பொருள் குற்றங்களாய் எடுத்துக் காட்டியவைகள் பத்திரிகையில் கண்டோமில்லை ஆயினும் அவர் எடுத்த கேள்விகளின் நான்கில் முதற்கேள்வி தமது சொல்லில் யாமெடுத்துக்கூறிய சொற்குற்றத்தை எடுத்துக்குறிப்பது அது வருமாறு "இவர் திருவாக்கின் பலத்தால் அவ்வியாப்தி அதிவியாப்தி இரண்டிலும் வியாப்தி என்று சொல்லிருக்கால் இரண்டும் வியாப்தி ஆகுங்கால். அசத்து சத்து அதிசத்து இம்மூன்றும் சத்தும், அயோக்கியம் யோக்கியம் இவ்விரண்டும் யோக்கியம் என்றும் பகுத்தறிவுடையவர் வழங்குவதாய் ஏற்படினும் அவ்வகைப் பகுத்தறிவு தற்கால் நமது நண்பரிடமே கண்டோம்,. என்கின்றார். அதற்கு அவர் எழுதிய விடை. அறிவார்ந்த விவேகிகளே!! அதிவ்வியாப்தி தோஷம் அவ்வியாப்தி தோஷம் என்னப்பட்ட தோஷங்களிரண்டினையுஞ் சொற்சுருங்கக் கூறவேண்டில் வியாப்திதோஷம் என்று கூறலாகுமென்றேமே அல்லாமல் வியாப்தி எனக்கூறலாகு மென்றிலம்- இதனை இன்னொருக்கால் பத்திரிகையிற் பார்த்துச் சந்தேகநிவர்த்தி செய்து கொள்ளலாம். இப்படியே அசத்து, சத்து,அதிசத்து இம்மூன்றையும் சத்துத்திரையம் என்றும், யோக்கியம் அயோக்கியம் என்பதை யோக்கியதாத்வயம் என்றும் கூறுதலேன்தகாது? மண்ணாசை; பெண்ணாசை,பொன்னாசை என்பனவற்றை சொற்சுருக்கமாய் மூவாசை என்று தமிழிலும் ஈஷணாத்திரயம் என்று சம்ஸ்கிருதத்திலும் கூறுகின்றிலரா? [முற்பவப்பகை.பிற்பவப்பகை இவ்விரண்டும் ஒழியும்] என்னும் கருத்தை யமைத்து நூலாசிரியர் ஒழித்திடும். "பவப்பகை,, என்று கூறிலரா? பாருங்கள் பாருங்கள் ஆதலால் இனியேனும் நமது நண்பர் எவரும் பாஷாவாதப்பாறையில் தலைமுட்டாரெனப் பிரார்த்திக்கின்றோம்.

என்றுஇவ்விதம்விடை எழுதியதைப் பார்த்தால்நாம் விதண்டாவாதம் செய்வது போலும், முன்பின் எழுதியதைப் பார்க்காதது போலும் தாம் எடுத்து விவேகிகளுக்குக் காட்டக்கருதி, அவர்களைநோக்கிப் பாருங்கள் பாருங்களென்று இவர் பலதடவை எடுத்துக் காட்டினும் அவர்கள் இதிலுள்ள குற்றத்தை அறியாமல் இரார் இவர் எடுத்துக்காட்டியபடி முற்பவப்பகை பிற்பவப்பகை இவ்விரண்டினும் பவப்பகத்தன்மை பொதுவாயிருத்தலாலும், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றிலும் ஆசையின் தன்மை ஒன்று பொதுவாயிருத்தலாலும் அதை இருபவப்பகை என்றும், மூவாசை என்றும் கூறுதலமையும்- இவைகளை மேற்கோளாய்க்காட்டி "அன்னத்தைக்காட்டிக்களியைத்திணிப்பதுபோல்,,முற்றிலும் ஒன்றுடன் ஒன்றுமுரணத்தக்க எதிர்மறைத் தன்மை பெற்ற அயோக்கியம் யோக்கியம் இரண்டையும் யோக்கியதாத்வயமென்றும்; அசத்தையும் சத்தையும் சத்து என்றும் அவ்வியாப்தி யையும் வியாப்தியையும் வியாப்தி என்றும் எடுத்துரைப்பது எவ்விதம் அறிஞர்கள் ஒப்புவாரோ அறியோம். நிற்க; இரண்டாவது கேள்வியாய் அவர் எடுத்துக் கொண்டது விஷயத்தை விட்டுச் சொற்களைப்பிடித்துக் கொண்டு வீண் வாதம் செய்வதனால்பிரயோசனம் ஒன்றுமில்லை என்று அவரே ஒருவழி ஒதுக்கியிருந்தபோதிலும்,நாம் காட்டவேண்டிய அம்சம் சிறிதுண்டு- யாம்எழுதியவாக்கியத்தைச் சற்றுக் கவனிப்பாரேல் நாத்திகருக்கு வரும் குறை அவருக்கே விளங்கும் அல்லது இதைக் கவனிக்கும்படி நமது நண்பர் எடுத்த பகுத்தறிவுடைய புத்திமான்களுக்கு விளங்கத்தடையில்லை- இவர் மூன்றாவதாய் எடுத்துக்கொண்டது "இவர்ஒற்றுமை என்பது,, பலர் ஒன்றுபட்டுப் பொதுவாய்சுகதுக்கங்களை அனுபவிப்பதன்றி வேறு யாதென எண்ணினரோ அறிகிலேன்என்பது யாம் எழுதிய வாக்கியமே. அதற்குஇவர் கொடுக்கும் விடையாவது "ஒற்றுமை என்பது ஒன்றும் தன்மை,, சகலரும் சாதி சமையாதி வேறுபாடின்றி ஒன்றுபட்டுப் பொதுவாய் சுகதுக்கங்களை அனுபவிப்பதுவே ஒற்றுமை என்பதற்கு யாம் கொண்ட பொருள் என்று எழுதினர்- இதில் யாம் பலர்என்று எழுதிய பதத்திற்குச் சகலரென்றும் பிரதி பதமும் அதிகமாய் ,,ஜாதிசமயாதி வேறுபாடின்றி,, என்பதும் யாம் எழுதிய ஒற்றுமை இலக்கணத்தில் நுழைக்கப்பட்டிருக்கின்றதேயொழிய வேறில்லை. அப்பதப்பொருள் யாம் சொன்னதே அவர் சொன்னதும் இவர் தமது ஆராய்ச்சிக் கேற்க"ஜாதி சமயாதி வேறுபாடின்றி என்பதை,, அச்சொற் பொருளிற்சேற்பாரேல், மற்றும்சிலதற்காலபிரம்ம க்ஞானிகள் பசு, பட்சி, மனுஷ்யசாதிவேறுபாடின்றிச்சேர்க்கத்துணிவார். அவ்விதம்சேர்ப்பதும் ஒரு சமயம் அப்பதப்பொருளாகுலுமாகுமோ ஏதோ அதுவிஷயம் நல்ல விவேகிகளெடுத் துரைப்பார்களாக; மேலும்யா

ம் இவாகேட்ட கேள்விக்குவிடை யளித்ததில் எல்லாவற்றையும் சேர்த்து தாமாய் மனதிற்கு ஓர் இலக்கணங்கட்டிக்கொண்டு அதுபொருந்தாதென மறுக்கின்றார். யாமதற்குச் செய்வதியாது? யாம்எழுதிய மனஇலக்கணம் இது ஆத்துமாவுக்கு அகப்பொருளறியுங் கருவி என்றுதொடங்கிஉளது அதிலகப்பொருளென்றால் எவையென நமது நண்பர் தத்துவவிவேசினி பத்திரிகாசாரியர் கேட்டதற்கு யாம்விடையளித்து அதுவிஷயம் விவாதமொருவிதம் முடிந்திருக்க, "சுற்றிச்சுற்றிச்சுங்கச் சாவடியில் வடிந்ததுபோல்,, நாம்மனவிலக்கணம் சொல்லத் தெரியவில்லையென்று ஒப்புக்கொண்டால் பிறகு தாம்சொல்வதாகவும் யாம் ஆன்மவிலக்கணம் குறிக்கவில்லை என்றும் பலவாறு யாம் எழுதியதைமுற்றிலும் பார்க்காமலே எழுதிவருகிறார் அவ்விதம்சொல்லவேண்டியது அவருக்குக்காரணங்களால் சிலஅவசியமாயிருந்தாலும் யிருக்கக்கூடும்ஆதலால், பத்திரிகாஅபிமானிகளானநண்டர்களே! தாங்கள் இவ்விருபத்திரிகைகளிலும் சற்றுக்கவனித்துப் பார்த்து எந்தெந்த விஷயங்கள் யாம் விடையளிக்கவேண்டியவைகளோ அவைகளை எடுத்துக்காட்டுவீர்களென, தங்களுடையசனத்தை எதிர்பார்த்திருக்கிறோம். மேலும் கடவுள் என்னும்சொல்லிற்கு இதுகாறும் நிராக்ஷேபமாய் இலக்கணம் கூறினார் ஒருவருமில்லையாதலால் அச்சொல்லிற்கு எமக்கும் பொருள் தோன்றவில்லை என்றெழுதினர். இச்சொல்லின் பகுதி விகுதிமுதலியவற்றை எடுத்துரைப்பதல்லவோசொல்லிற்கிலக்கணம் அவ்விதச்சொல்லிலக் கணம் இச்சொல்லின்கண் நிராக்ஷேபமாயமைக்காது இலக்கணக்காரர்கள் விட்டால்லை இலக்கணங்களை உற்றுநோக்கில் அச்சொல்லிலக்கணம் அங்கேவெளியாகும் நமது நண்பருக்குபிறரைப் பரிகசிக்குங்கால் "முயற்கொம்பை மூழம்போடுவது,, யென்கிறவிடத்திலுள்ள முயல்கொம்பு முதலியபதங்களுக்கும் பொருளறிந்து அஞ்சாமல் விவகரிக்கத்துணிந்தும். தாம் இந்த அரியசொல் ஒன்றுக்குத்தமக்குப்பொருள் தோற்றவில்லை என்று எழுதியதற்குக் காரணம் யாதோஅறிகிலேன். பிறகு நாம்கேட்டதொன்றிருக்க வேறொன்று கூறிவருவதும் மந்தமதிகளை மலைக்கச் செய்வதும் கேட்டகேள்விக்கு அஞ்சிவிடைகொடுப்பதும், சொற்சாலம் காட்டுவதும், எம்மிடம் குறைவெனச்சாதுரியமாய்எடுத்துக்காட்டினர். விவேகிகளே! நமது நண்பரைப்போல் பலசபைகளில் வந்துமேலான பிரசங்கங்களைச்செய்து பிராசீனநவீனவித்வத்சிகாமணிகளானந்திக்க கேட்டகேள்விகளுக்குகூசாமல் விடைபகர்ந்து பலபத்திரிகாசாரியர்கள் புகழப்பதம் பெற்றிருப்பது வேறு ஒருவர்க்குஅருமையேனும் அவ்விதமில்லாமல் எம்போலிகள்உரைப்பதையும் தயைசெய்து நமது நண்பர்சற்றுக் கவனித்து ஏதோதமது சௌரவத்தையே பாராட்டித் தோன்றியபடி விடை கொடுத்து எமது வார்த்தைகளைக் கிரமமாய்ச்சீர் திருத்தித்தமது நண்பையும் உலகக்ஷேமத்தில் தமக்கிருக்கும் பெரும் விருப்பத்தையும் வெளியிடுவாரென அவரது சௌரவத்தையும் வேண்டிக்சொள்ளுகிறோம். நிற்க; நமது நிருபநேசர்களுள் ஒருவரான இந்து என்பவர் நமது பத்திரிகையிலும் மித்திரன் பத்திரிகையிலும் எழுதிய "உலகம்சத்தா அசத்தா,, வென்னும் விஷயத்தைப்பற்றி ஹிதோபதேசியார்என்கையொப்பமிட்டு அவரது தத்துவ விவேசினிப் பத்திரிகையில் வெளிவந்த ஓர்நண்பருடைய வாதம் சென்ற ஜனவரி மீ வெளிவந்த ப்ரம்ம வித்தியா பத்திரிகையில்கண்ட "விடை கூறலென்னும் விஷயத்துடன் நின்றது. ஜனவரி மீ இரண்டாம் தேதி வெளிவந்த "தத்துவவிவேசினி,, பத்திரிகையில் "இந்துதத்துவப்பிரபாவம்,, என்றுமுடியும் இன்னும் வருமென்று அடியிலுள்ள ஓர் விஷயத்தைகலியுகவித்தை ,,என்னும் தலைப்பைக்கொண்டும் ஓர் தமிழர் என்னும் கையொப்பமிட்டு கண்டித்தநமது ஓர் நிருபநண்பர் அதின்தொடரை எதிர்பார்ப்பதுடன்இன்னும் சிலவிஷயங்களை எழுதுவதற்கு அவர்எடுத்துக்கொள்ளத்தக்க விஷயங்கள் நடுவிலெடுத்துக்கொண்டால், அவ்வளவு உசிதமில்லை என்றெண்ணி அவற்றின் முடிவையும எதிர்பார்த்திருக்கின்றார்.

[தத்துவவிவேசினி யைக்குறித்து ஆண்டான் அடிமையென்டவர்எழுதியதுபின்வரும்]

மகாஜன சபையாரின் மூன்றாவது வருஷாந்தரக்கூட்டம்.

சென்னை மகா ஜன சபைக்கமிட்டியார் மேற்படி சபையின் ௩-வது வருஷாந்தர மகாநாடு கூடுவதை ஈஸ்டர் விடுமுறை காலத்தில் ஏப்ரல்மாதம் ௯- ௰- தேதிகளில் கும்பகோணத்தில் வைத்துக்கொள்ள உத்தேசங்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்த்மஸ் விடுமுறைகாலத்தில் நேர்ந்திருக்க வேண்டிய ஷ மகாநாடானது அதேகாலத்தில் கல்கத்தாவில் காங்ரெஸ்சபை கூடிய காரணத்தால் தள்ளிவைத்துக் கொள்ளப்பட்டது. மகாநாடு கூடும் பிரதிநிதிகளின் முன் ஆலோசனைக்குக்கொண்டுவர நியமிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் என்னவெனில்:—(க) காடு, உப்பு இலாகாக்களின் சட்டங்களால் விளையும் நலந்தீமையைப்பற்றி இன்னும் மேல் யோசனைசெய்தல்; (உ) ஜமாபந்தி நடத்தும் விதம்; [௩] புறம்போக்கு நிலங்கள் சம்பந்தமாய் சனங்களுக்குள்ள பாத்தியா பாத்தியங்கள்; [௪] தேவஸ்தான காரிய விசாரணை விஷயம் [௫] கிராமமுனிசீபுகள் ஆக்ட்டு அனுட்டானத்தால் உண்டாகும்பயன்.

மேற்குறிந்த விஷயங்களில் எல்லாவற்றிலுமாவது எந்தவிஷயங்களிலாவது தாஙகள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைக்காகிதத்தில் எழுதிமகாநாட்டுக்குமுன் வாசிக்கப்படத்தக்கதாக முன்னதாகவேகாரியதரிசிகள் பெயருக்கு அனுப்பிவைப்பீர்களானால் அது தாங்கள் கமிட்டியாருககுச்செயத ஒரு பெரியஉபகாரமாக விருக்கும். மேலும் இவ்விராஜதானியில்இராஜாங்கவிஷயமாய் ஏற்பட்டுள்ள எல்லாச்சங்கங்களும் மேற்குறித்தமுக்கியமானவிஷயங்களைப்பற்றி அந்தந்தச்சங்கத்தார் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைத்தெரிவிக்கக் கும்பகோணத்தில் கூடும் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பும்படி மேற்குறித்த ஒவ்வொரு சங்கத்தாரையும் மகாசன சபையின் கமிட்டியார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்-

ப. அனந்தாசார்லு,
மு. வீரராகவாசாரி,
காரியதரிசிகள்,

ப. இரங்கய்யநாயுடு.
அக்கிராசனதிபதி

இங்ஙனம் கூ-மீ.

ப்ரஹ்மவித்யா.

பத்திரிகை கிரயம்.
இந்தியா 1-வருஷம் ரூ 1. 12. 0. 0.
6-மாதம் 1. 0. 0. 0.
3-மாதம் 0. 9. 6.
1-மாதம் 0. 3. 6.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

மாதம் ஒருமுறை பிரசுரஞ்செய்யப்படும்.

உ-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஸ்ரீ ஆனிமீ கஅ-உ க்கு கஅஅஎஸ்ரீ ஜூன்மீ ௩௰-உ வியாழக்கிழமை. { இலக்கம்—க

ஸ்ரீ: உபநிஷத்

[illegible]

ஓர் உபநியாசம்.

[க-ம் புத்தகம் கஅ௩-ம் பக்கத்தொடர்பு]

புத்தன் பிறத்தற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே யவதரித்த ஜனகன், விசுவாமித்திரனுதியோர் சரித்திரங்களும் இப் புத்தன் சரித்திரமும் பெரும்பான்மை வேறுபட்டிருப்பினும், பிராமணர்களின் பெருமையை யொழிக்கவேண்டுமென்னுங்கருதது இம்மூவர்க்கும் பொதுவாயதேயாம். புத்தருக்கெய்திய பிரசித்தியும் பிராமணாகள் கற்பித்த பல ஏற்பாடுகளை மீறிநடந்ததனுலென்பது நிச்சயம். விசுவாமித்திரனும், ஜனகனும் பிராமணர்களின் பெருமையைத் தாமே பெற்றவர். புத்தனே ஏழைகள் இழிகுலத்தவரி லநேகரைத் தமது சித்தாந்தத்தைத் தெரிந்துகொள்ளுமாறு செய்துவந்தான். ஜாதி வேறுபாடானது உலகத்தாரேற்படுத்திய ஒரு கட்டுப்பாடு என்று அன்னோரா லொப்புக்சொள்ளப்பட்டது. அவற்றைக் கடக்க வேண்டுமென்பது அவருடைய உட்கருத்தன்றேயாயினும், பிராமணர்கள் சர்வாதிகாரங்களையும் தம்வயப்படுத்தி, ஏனைய வருணத்தவர்பாற்காட்டிவந்தகொடுமையைச் சிறிதும் சகிக்கலாற்றாதவராயினர். பின்பு பிராமணர்கள் தமது அதிகாரத்திற்கு மாறாகநேர்ந்த ஓர் கெடுதியைக் கண்ணுற்று "க்ஷத்திரியர்கள் பிறர்க்குபதேசம்புரிதல் தவறென்றும், வேதத்திற் கூறிய தருமங்களுக்கு மாறாக இயற்றுவதால் இவர் பாபியென்றும்,, வெளியிட்டுவந்தனர். புத்தனே தமக்குப் பெருமையைச் சிறிதுங் கருதாது, உலகத்தின் க்ஷேமத்தையே நாடி யாவர்க்கும் சுகமாய்த தமது சித்தாந்தத்தையே வெளியிட்டுவந்தான். தான் அரசனுயிருந்தும் தனது பெருமையைச் சிறிதும் பாராட்டாது சாமானியர்களோடுங்கூடிக்கலந்து வெளியிட்டுவந்தமையால், அச்சித்தாந்தங்கள் யாவராலுமொப்பத்தக்க நிலைமையை யெய்திற்று. அவர் வெளியிட்ட சித்தாந்தமாவன:—"தோன்றுவனவெல்லாம் நசிக்கும்; புண்ணியமென்பது பாவத்தினும் மேம்பட்டது; எதுவரையில் ஒருவன் தன்னையும் தனது பொருளையுந் துறக்க முயல்வானே அதுவரையும் கோபம், காமமாதியவற்